செ.வெ.எண்:42 நாள்: 16.11.2019

**தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் நடைபெற்ற விழாவில், சுகாதாரத்துறையின் மூலம் தாய் சேய் நல வாகனத்தினை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர்.செ.ராஜூ அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

---

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் சுகாதாரத்துறையின் மூலம் தாய் சேய் நல வாகனத்தினை துவக்கி வைக்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.11.2019) நடைபெற்றது. இவ்விழாவில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர்.செ.ராஜூ அவர்கள் கலந்து கொண்டு, தாய் சேய் நல வாகனத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார். இவ்விழாவில், விளாத்தின்குளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.போ.சின்னப்பன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

பின்னர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர்.செ.ராஜூ அவர்கள் பேசிதாவது:-

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கிராமத்தில் உள்ள ஏழை, எளிய மக்களுக்கு சிறந்த முறையில் மருத்துவ சேவை அளிக்க வேண்டும் என்பதற்காக 108 ஆம்புலன்ஸ் சேவையை ஏற்படுத்தி தந்தார்கள். மேலும், பொது மக்கள் பயன்பெறும் வகையில் சுகாதாரத்துறையின் மூலம் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது. இன்று கோவில்பட்டி சுகாதாரப்பகுதி மாவட்டம், குழந்தை இறப்பு விகிதம் மற்றும் மகப்பேறு இறப்பு விகிதத்தை குறைக்கும் வகையில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் ரூ.12 இலட்சம் மதிப்பிலான 25 இருக்கைகள் கொண்ட தாய் சேய் நல வாகனம் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த வாகனம் ஓட்டப்பிடாரம் வட்டார மேம்படுத்தப்பட்ட சமுதாய நல மையத்திற்கு வழங்கப்படுகிறது. இந்த வாகனத்தின் மூலம் மாதத்திற்கு 4 முதல் 8 தாய் சேய் நல சுற்றுலாக்கள் நடத்தப்படும். மேலும், கர்ப்பிணித் தாய்மார்களை இந்த வாகனத்தின் மூலம் சுகாதார நிலையத்திற்கு அழைத்துவரப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள வசதிகள் மற்றும் சேவைகள் பற்றி எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். மேலும், அவர்களுக்கு தேவையான கர்ப்பக்கால பரிசோதனைகள் மற்றும் சேவைகள் வழங்கப்படுகிறது. உயர்தர சிகிச்சைகள் தேவைப்படும் கர்ப்பிணி பெண்களை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று தேவையான பரிசோதனைகள் செய்யப்படுகிறது. எனவே, ஓட்டப்பிடாரம் வட்டத்தில் உள்ள காப்பிணி தாய்மார்கள் இந்த சேவையினை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில், கோவில்பட்டி கோட்டாட்சியர் திருமதி.விஜயா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.மோகன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) கோவில்பட்டி மரு.போஸ்கோராஜா முக்கிய பிரமுகர்கள் திரு.ராமசந்திரன், திரு.இ.பி.ரமேஷ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடாபு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.